வரும், சுப்பிரமணியம், மகேசுவரி ஆகிய குழந்தைகளும் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் மண்ணடித்துப் போய் இருக்கின்றன. அதைப்பற்றிய குறிப்பு அறிக்கையிலே இல்லை, எந்தத் தகவலும் இங்கே தெரிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20 ஆம் தேதி அதுபற்றி விவாதம் நடைபெற இருக்கிறது. அன்றைய தினம் திரு இராசு இது குறித்து வேண்டுமானால் பேசலாம்.

(ஆ) தமிழகத்திற்கு மத்திய இருப்பில் இருந்து கிடைக்கும் அரிசி உதவி.

திரு என். வரதராஜன் : தலைவர் அவர்களே, முக்கிய மான ஒரு பிரச்சினையை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காலம் தாழ்ந்த பெய்த மழையின் காரணமாக தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் விவசாயிகளும் மற்றவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அறுவடைக்கு ஸ்ரயக்கான நெல் மணிகள் அழிந்துக் கொண்டிருக்கின்றன. அந்த அழிவின் காரணமாக ஏற்கெனவே வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை மேலும் வேதனை குள்ளாக்குகின்ற வகையிலே இன்றைக்கு அகில இந்திய வானொலி யிலே ஒருசெய்தி காலையிலே வருகிறது, அந்தச் செய்தியைக் கேட்டவுடனே நான் அதிர்ச்சியடைந்தேன், இந்தச் சபையே அதிர்ச்சியடையக்கூடியச் செய்தி. ஏற்கெனவே நமக்கு மாதம் ஒன்றுக்கு இலட்சம் டன் அரிசி கொடுக்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆனால், 40 ஆயிரம் டன்கள் கொடுக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். காலையிலே சொன்ன செய்தியிலே இந்த மாதம் 35 ஆயிரம் டன்னும், அடுத்த மாதம் 25 ஆயிரம் டன்னும் கொடுப்போம் என்று அதிகாரப்பூர்வமாக ரேடியோவிலே அறிவித்தார்கள். தமிழ் நாட்டில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை மேலும் வேதனையில் ஆழ்த்துகின்ற முறையிலே அவர்கள் மேல் பாய்ச் சலை செய்வதைப்போல் மத்திய அரசு செய்து கொண்டிருக் கிறது. இதற்கு மாநில அரசு எடுத்துக் கொள்கின்ற நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரிசியைக் குறைத்திருக் கிறார்கள். திரும்பவும் இவர்கள் எழுதுவார்கள் (குறுக்கீடு) அந்தக் கஷ்டம் தெரிகிறது. ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுங் கள். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.